விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 22 வியாழக்கிழமை (06.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 199

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்படுவது.
ராம்கோ சீமெந்து

## கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தாயக விடுதலைப் போரில் உயிர் ஆயுதங்களான கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் உணர் வெழுச்சியுடன் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தின் பிரதான நிகழ்வு பளையில் நடைபெற்றது. இதற்கு நிர்வாகப் பொறுப்பாளர் சுதாஸ் தலைமை தாங்கினார். வடமராட்சி பொதுஅமைப்புக்களின் தலைவர் பொதுச் சுடரினை ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியினை கொடிகாமம் பிரதேச பொறுப்பாளர் இரத்தினம் ஏற்றினார்.

ஈகச் சுடரினை அருள் ஏற்ற மலர் மாலையினை பளை கிராம அலுவலர் பாலசுந்தரம் அணிவித்தார். இரத்தினம் சிறப்புரை நிகழ்த்தினார்.

பூநகரி வாடியடியில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வுக்கு பொன்.தில்லைநாதன் தலைமை வகித்தார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாவீரர் நினைவு அரங்கில் கரும்புலிகள் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்துக்கல்லூரி அருகே நேற்று வெடிகுண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி வளாகத்திலிருந்து இராணுவத்தினரால் குண்டு ஒன்று மீட்கப்பட்டு அது வெடிக்க வைக்கப்பட்டது. இச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை யாழ்.இந்துக் கல்லூரியில் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. கரும்புலிகள் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு முடிந்தவேளை காலை 11.30 மணியளவில் பாடசாலைக்கு கனரக வாகனங்கள், மோப்ப நாய்கள் சகிதம் சென்ற பெருமளவான இராணுவத்தினர் அங்கு தேடுதலில் ஈடுபட்டனர்.

பாடசாலைக் கட்டடம் எங்கும் சல்லடை போட்டு தேடுதல் நடத்தினர். அப்போது குமாரசாமி மண்டபத்திற்கு முன்னால் உள்ள வீதியோரத்தில் குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

இதையடுத்து மண்டபத்தினுள் இருந்த மாணவர்கள், ஆசிரியர்கள் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர். பின்னர் குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் சென்று குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இதேவேளை இச் (08 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண 12 நிபுணர்களைக் கொண்ட குழு

## அரச தரப்பு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரச தரப்புத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய குழு ஒன்றை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார்.

இதற்கு ஆலோசனை வழங்குவதற்காக பன்னிரண்டு நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு இடையே பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதன் ஓர் அங்கமாக இக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றது முதல் ஆறு தடவைகள் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அதனடிப்படையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டதற்கேற்ப இக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் பலாலி தடுப்பு முகாமில்

(யாழ்ப்பாணம்)

கடந்த 27 ஆம் திகதி மீசாலை புத்தூர்ச் சந்தியில் கைதுசெய்யப்பட்ட கணபதிப்பிள்ளை கிரிதரன்(வயது-16), கணேசமூர்த்தி ஜெயரூபன்(வயது-23) ஆகிய இரு இளைஞர்களும் பலாலி இராணுவத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரையும் நேற்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழு சட்ட ஆலோசகர் றெமிடியஸ், யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

(ச-133)

## உறங்கிக் கொண்டிருந்த பெண் கழுத்து நெரித்துக் கொலை

### கொள்ளையர்கள் அட்டகாசம்



(யாழ்ப்பாணம்)

கொள்ளையர்களினால் கழுத்து நெரிக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு உடுவில் பொன்னம்பலம் வீதியில் இடம் பெற்றுள்ளது.

நள்ளிரவுவேளை புகைக்கூடு வழியாக உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பொன்னம்பலம் புனிதவதி (08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிளைமோரில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா பிரப்பமடுவில் கிளைமோர்க் கண்ணிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். கச்சிகுட்டிய - பிரப்பமடு வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் வீதிச் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து இரு கண்ணி வெடித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கருணாதிலக்க என்ற இராணுவத் தரப்பைச் சேர்ந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

(ச-5)

### கொக்குவில் சந்தியில்

## சாரதியைத் தாக்கிய சம்பவத்தில் 8 இராணுவத்தினர் பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பஸ் சாரதி தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 8 இராணுவத்தினர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர்மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து அவ் வீதியூடாக வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதி இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இதுகுறித்து விசாரணை மேற்கொண்டபின், அச்சம்பவத்துடன் தொடர்புடைய 8 இராணுவத்தினர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி மனித உரிமை (08 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனவரின் அ.அட்டை தபால் ஊடாக அனுப்பி வைப்பு

வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி வந்த குடும்பஸ்தர் ஒருவரை காணவில்லை என அவரது மனைவி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி வவுனியாவிலிருந்து புறப்பட்ட இளவாலையைச் சேர்ந்த சவரிமுத்து அன்ரன் நியூட்டன் (வயது-36) என்பவரேயே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.இதேவேளை இவரது அடையாள அட்டைகள் தபால் மூலமாக வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பொதி செய்யப்பட்ட நிலையில் கிடைக்கப்பெற்ற அதனை பிரித்துப் பார்த்தபோது அதனுள் பிரஸ்தாப நபரின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பொதி சாவகச்சேரி தபால் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டதாக அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறையிட்டுள்ளார்.இச் சம்பவம் தொடர்பாக இளவாலைக் கிராம சேவகர் மற்றும் இளவாலைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.(ச-133)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## விண்ணப்ப / கூறுவிலை முடிவுத் திகதிகளை நீடித்தல்

| விண்ணப்ப/ கூறுவிலை விபரம் | வழங்கப்பட்ட கால எல்லை | நீடிப்பு வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|
| 1. தனியார்பாதுகாப்புசேவை | 27.06.2006 நண்பகல் 12.00 மணிவரை | 12.07.2006 நண்பகல் 12.00 மணிவரை |
| 2. யாழ்.பொதுசனநூலக சிற்றுண்டிச்சாலைக்குரிய தளபாடங்கள் | 29.06.2006 நண்பகல் 12.00 மணிவரை | 12.07.2006 நண்பகல் 12.00 மணிவரை |

மேற்படி சேவை மற்றும் கூறுவிலைகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. கேள்விகள் 2006.07.12 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும்.

(சீ.வீ.கே.சிவஞானம்)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாள் நிகழ்வை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட மாணவர்களுக்கிடையிலான ஓவியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவை வருமாறு,

**பிரிவு- 01**
**(7ம், 8ம், 9ம்தரத்திற்குரியது)**

முதலாம் இடம்- செ.சிவதீஸ்வரன் (ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), இரண்டாம் இடம்- கா.துஸ்யந்தன் (மு.கொக்குத் தொடுவாய் அ.த.க.பாடசாலை), மூன்றாம் இடம்- ம.றொக்சன் (தாளையடி றோ.க.பாடசாலை), நான்காம் இடம்- வி.மேர்வின் வினோதன் (அக்கராயன் ம.வி), ஐந்தாம் இடம்- கி.கருணதாஸ் (கனகராயன் ம.வி).

**பிரிவு- 02**
**(10ம், 11ம் தரத்திற்குரியது)**

முதலாம் இடம்- ஆ.ஜெயவினோதன் (உடுத்துறை ம.வி), இரண்டாம் இடம் - சி.அருண்சன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), முன்றாம் இடம்- சி.தனுசியன் (மாங்குளம் ம.வி), நான்காம் இடம்- செ.லோசன் (கனகாம்பிகைக்குளம் ம.வி), ஐந்தாம் இடம் சி.சுகந்தன் (நெடுங்கேணி ம.வி)

**பிரிவு- 03**
**(12ம், 13ம் தரத்திற்குரியது)**

முதலாம் இடம் - சீ.முகுந்தன் (முல்லைத்தீவு ம.வி), இரண்டாம் இடம்- கோ.நந்தசொருபன் (அக்கராயன் ம.வி), மூன்றாம் இடம்- க.கஜன் (யாழ்.உடுத்துறை ம.வி), நான்காம் இடம்- க.நிசாந்தன் (மாங்குளம் ம.வி). (க)

## அத்திவாரக் கல் நாட்டல்

நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தையின் இரண்டாவது நவீன மாடிச் சந்தைக்கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் இதற்கான அத்திவாரக் கல்லை நாட்டுவார். (து-133)

# இராசிபலன்

**06.07.2006**
**(ஆனி 22, வியாழக்கிழமை)**
**தசமி முற்பகல் 11.44 மணி வரை**
**சுவாதி முற்பகல் 11.57 மணிவரை**
**இராகுகாலம் 1.28-2.58மணிவரை**
**சுபநேரம் 7.28-8.58 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில் விருத்தி. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர உதவி, சுபநிகழ்வு, போசனசுகம். |
| மிதுனம் | வியாபார நன்மை, சொத்துப்பிணக்கு, உஷ்ணவியாதி, முயற்சி தாமதம். |
| கடகம் | தொழில்சிந்தை, தாய்வழி உறவு, நல்ல முயற்சி, வாகன சுகம். |
| சிங்கம் | அன்னியர் சந்திப்பு, காரியநன்மை, தன்னம்பிக்கை, போசனசுகம். |
| கன்னி | குடும்ப சுகம், தொழில் நன்மை, கடின வார்த்தை, திடீர் நன்மை. |
| துலாம் | சினேகிதர் சந்திப்பு, தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, பித்தரோகம். |
| விருச்சிகம் | இடமாற்றம், காரிய அலைச்சல், போசன சுகக்குறைவு, பெரியோர் வெறுப்பு. |
| தனுசு | மனமகிழ்ச்சி, பொருள்சேர்க்கை, கீர்த்த, தொழில்விருத்தி. |
| மகரம் | பிறர் உதவி, காரிய நன்மை, ஆரோக்கியம், போசன சுகம். |
| கும்பம் | கட்டுப்பாடு, சரீர பிரயாசை, முயற்சி தாமதம், பொருள்விரயம். |
| மீனம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, போசனசுகம். |

- வளவன்

# காணாமல் போன சிறுமி

உரும்பிராய் கருணை இல்லத்தில் தங்கியிருந்த 16 வயதான சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதம் 26ஆம் திகதி சிவகுருநாதன் சித்திரா என்ற பெண் காணாமல் போயிருந்தும் கூட அந்நிலைய நிர்வாகிகள் எதுவித அக்கறையும் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த 30ஆம் திகதியன்று அச்சிறுமியின் பெற்றோர் மகளைப் பார்க்க கருணை இல்லத்துக்குச் சென்றிருந்தபோதே அச் சிறுமி 26ஆம் திகதி முதல் காணாமல் போனார் என்ற சங்கதி வெளிச்சத்துக்கு வந்ததாகத் தெரிகிறது. (து-133)

# மோசமான பாதுகாப்பு நிலைமைகளால் கிழக்கில் மீளமைப்பு பணிகள் பாதிப்பு!

கிழக்கு மாகாணத்தில் மோசமான பாதுகாப்பு நிலைமைகளால் மீளமைப்புப் பணிகள் தாமதமடைந்து வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வுக் கழகத்தின் பேச்சாளர் அர்ஜுனன் எதிர்வீரசிங்கம் இதுபற்றிக் கூறுகையில்,

கிழக்கில் வன்முறைகள் நீடிப்பதால் மீளமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. வன்முறைகளால் சில பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்வது கடினமாகவுள்ளது.

சீமெந்து மற்றும் இரும்புத் தகடு போன்ற பொருட்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் தடை விதித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு அப்பொருட்களை எடுத்துச் செல்ல அரச அதிபர் ஒப்புதல் பெற்றுத்தர வேண்டும். இருப்பினும் வடக்கு- கிழக்கில் மீளமைப்புப் பணிகளை இடைநிறுத்தும் முடிவு எம்மிடம் இல்லை. ஆனாலும் பணிகள் தாமதமடைகின்றன என்றார். (க)

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களை தடை செய்யவேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களையும் தடை செய்ய வேண்டும் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னார்ட் குணதிலக்க வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் வோசிங்டன் நகரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், 1992ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா, கனடா, அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்துள்ளனர்.

இருப்பினும் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் இன்னும் பல நாடுகளில் இயங்குகின்றன. உலகத் தமிழர் கழகம், உலகத் தமிழர் இயக்கம், கனேடிய தமிழர் கூட்டமைப்பு போன்றவை விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றன. இந்த அமைப்புகளையும் அந்தந்த நாடுகள் தடைசெய்ய வேண்டும் என்றார். (க)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று பதினோராம் திருவிழா

### பாகம் கொண்ட பராபரியே!

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத
, எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்
வழியால் மதனை
அழிக்கும் தலைவர், அழியா
விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும்படி ஒரு பாகம்
கொண்டு ஆளும் பராபரையே!

அபிராமி அந்தாதி

### நினைத்ததை தருபவள் நீயல்லவா!

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனதில் நோற்றதையெலாம்
நொடியில் அளிப்பவள் நீயே!
கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தைக்
கொழிக்கச் செய்திடும் தாயே
மாற்றார் மனதில் மயக்கம் அறுத்து
மாற்றம் கொடுப்பவள் நீயே!

மதுரகவி

### பகைவெறி அடக்கி வாட்டு

கண்கண்ட தெய்வம் என்று
கருதியே அடியார் கூட்டம்
உன்சந் நிதியை நாடி
ஓடியே வந்து சேர்வார்
திண்கொண்ட சக்தித் தாயே
தீரத்தை நடத்திக் காட்டு
பண்பிலா மூடர் தங்கள்
பகைவெறி அடக்கி வாட்டு

கவிஞர் வ.யோகானந்தசிவம்

### ஈஸ்வரி நயினைத் தாயே!

வித்தகி வித்தைக் கெல்லாம்
வித்து நீ விமலனாரின்
பத்தினி பாவந் தீர்க்கும்
பார்வதி பாம்பிலேறும்
உத்தமி உந்தன் கோவில்
உற்சவம் கண்ட பேர்கள்
எத்துணை தவங்கள் செய்தார்
ஈஸ்வரி நயினைத் தாயே!

கவிஞர் நயினை இராகுலன்

### அருள்வாய் நாகபூசணியே!

நயினையிலே கோயில் கொண்ட நாகபூசணி
நாடிநிதம் வருபவர்க்கு அன்னபூரணி
பயமதனை நீக்கும் மகிடாசுர மர்த்தனி
புகழ்பாடிப் பரவுவோர்க்கு அமிர்தவர்சினி
ஜயமளித்துக் காக்கின்ற ஆத்மரட்சகி
சர்வலோக நாயகியாம் புவனேஸ்வரி
மயம் அவளாய் நெஞ்சில் நிறை மனோன்மணி
முன்னைவினை தீர்த்தருளும் மகேஸ்வரி!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### கூப்பாடதனைக் கேட்டிலையோ?

அருளைப் பொழிய வந்தருள்வாய்!
அவலம் தீர்க்க வந்தருள்வாய்
மிடிமை தீர்க்க வந்தருள்வாய்
விரைவாய் விரைவாய் வந்தருள்வாள்
காப்பாய் என்று உன் மலர்ப்பாதம்
கட்டிக் கதறி அழும் பக்தர்
கூப்பாடதனைக் கேட்டிலியோ?
குமரன் தாயே வந்தருள்வாய்!

செல்வி

# வங்கி வைப்புகளைக் கையகப்படுத்தும் அரச நடவடிக்கை

1995ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எந்தவித்மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத சகல வைப்புக் கணக்கிலும் உள்ள வரவு மீதிகள், இதே ரீதியில் 10 வருடங்களாக நடைமுறைப் படுத்தப்படாத பாதுகாப்புப் பொட்டகங்கள். (Safe Deposit) முதலியன சம்பந்தமான விபரங்கள், மத்திய வங்கியின் வங்கிச் சட்டத்தின் 72, 73ஆம் பிரிவுகளுக்கு அமைய சகல வர்த்தக வங்கிகளிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய மேற்படி வங்கிகளில் குறித்த கணக்குகளில் உள்ள சொத்துக்கள் கைவிடப்பட்ட சொத்துக்களாக கருதப் பட்டு அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும்.

இச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் பாதிக்கப்படுபவர்கள் பனைமரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதை போல் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு முகங்கொடுத்துவரும் யாழ்ப்பாண தமிழ் மக்களே யாவர்.

நாட்டின் சூழ்நிலையால் புலம் பெயர்ந்தவர்கள், தாங்கள் திரும்பி வரும் நேரத்தில் உதவுமென பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இவ் வங்கிகளில் கொண்ட நம்பிக்கையால் தமது சேமிப்பை இவ் வங்கிகளில் வைப்பிட்டுள்ளார்கள். தாங்கள் திரும்பி வரும் நேரத்தில் இப் பணத்தை பயன்படுத் தலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் குறிப்பாக புலம் பெயர்ந்தவர்களால் வங்கியிடப்பட்டுள்ள பல மில்லியன் ரூபா பணம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டுவிடும். போர்ச் சூழலால் நாடு கொந்தளித்து மக்கள் உள்ளூரிலும் கடல் கடந்த நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் நிலையில் அவசர அவசரமாக அரசாங்கம் இச் சட்டத்தை கொண்டுவர உத்தேசித்துள்ளதற்கான காரணம் எவருக்கும் தெரியாது.

குறித்த ஒரு வங்கியில் சேமித்து வைத்துள்ள பணம் இவ்விதம் அரசுடமையாக்கப்படுமானால் மக்களுக்கு வங்கிகள் மேல் உள்ள நம்பகத்தன்மை இல்லாதொழிந்துவிடும் அபாயமும் இதில் உள்ளது.

கேட்கும் நேரத்தில் திரும்பப் பெறலாம் என்ற உத்தரவாதத்துடன் வைப்புச் செய்யப்பட்ட பணம் இவ்வாறு அரசாங்கத்தால் கையகப்படுத்தும் நிலை ஏற்பட்டால் யாரைத்தான் நம்ப முடியும் என்ற நிலைதான் ஏற்படும்.

இப் புதிய நடைமுறையால் பெரிதும் பாதிக்கப்படப் போகிறவர்கள் சிங்கள மக்கள் அல்ல. தமிழ் மக்களே என்பது அரசாங்கத்திற்குத் தெரியாமல் இருக்க முடியாது. வடபகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்துவார்களா என்பது பாதிக்கப்படப் போகிறவர்களது அங்கலாய்ப்பாக இருக்கிறது. (து)

# குலதுங்கவின் பாதுகாப்பு குறைபாடு குறித்து விசாரணை நடத்த வேண்டும்

## என்கிறது ஐ.தே.க.

மூன்றாம் நிலைத் தளபதி பரமி குலதுங்கவிற்கு வழங்கப் பட்டிருந்த பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய இதுபற்றிக் கூறுகையில்,

பரமி குலதுங்க கொல்லப்பட்ட சம்பவத்தில் பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும். குலதுங்கவுக்கு ஏன் இராணுவக் குடியிருப்பில் இடம் ஒதுக்கப்படவில்லை? குல துங்கவின் மரணம் நம் மதத்திற்கும் நாட்டுக்கும் பாரிய இழப்பு. இந்த நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டினது சுதந்திரத்திற்காகவும் தன்னைத் தியாகம் செய்துள்ளார். அவரது மூத்த சகோதரி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பரமி குலதுங்கவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடு இருந்ததாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டும். இதுகுறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும். எல்லையோரக் கிராமங்களில் உள்ள மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். நாட்டின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையிலும் அரசாங்கமும் அரச ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார். (கு)

# நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட கரும்புலிகள் தின நிகழ்வின் போது...
















படங்கள் திலீபின்பன்





## இன்று ஒரு தகவல்

# இரட்டைக் குழந்தைகள்

ஆபிரிக்காவில் உள்ளது சூடான் நாடு. அங்கேயுள்ள ஒரு தொலை தூர நகரம் அங்குள்ள ஒரு பள்ளிக் கூடத்தில் கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக வேலை செய்துகொண்டிருந்தனர்.

1987 இல் அவர்களுக்கு குழந்தை பிறந்தது. ஒரு குழந்தை இல்லை. இரட்டைக் குழந்தைகள் இரட்டைக் குழந்தைகள் பிறப்பது ஒன்றும் அபூர்வமான விசயம் இல்லை.ஆனால் இரண்டு குழந்தைகளும் ஒட்டிப் பிறப்பது அபூர்வம்தானே. அப்படி எப்போதாவது தானே நடக்கின்றது. இந்த இரண்டு குழந்தைகளும் அப்படித் தான் ஒட்டிப் பிறந்தன. இதிலே என்ன கஷ்டம் என்றால் இது போல் ஒட்டிப்பிறக்கும் குழுந்தைகள் பெரும் பாலும் இறந்து விடுவது தான் வழக்கம். சரி... அந்தக் குழந்தைகளை அறுவைச்சிகிச்சை மூலம் தனித் தனியாகப் பிரித்துவிடலாம் என்றால் அதுவும் இதுவரைக்கும் மிகவும் கஸ்டமாகத்தான் இருந்தது.

ஆனால் இப்போது மருத்துவ நிபுணர்கள் அதையும் செய்து விடுகின்றனர். அந்தளவுக்கு மருத்துவத் துறை முன்னேறியுள்ளது. இந்தக் குழந்தைகளையும் அறுவைச்சிகிச்சை செய்து பிரித்துவிட்டனர். அறுவைச் சிகிச்சை லண்டனில் நடந்தது. இப்படி ஒட்டிப் பிறந்தவாகளைப் பிரிக்காமல் விட்டு விட்டால் என்ன ஆகுமென்றால் ஒருவரது சத்தை இன்னொருவர் உறிஞ்சுவதால் பலவீனமான குழந்தை இறந்துவிடும்.

லண்டனில் கிரேட் அர்மண்ட் வீதியிலுள்ள மருததுவமனையில் பேராசிரியர் டாக்டர் ஸ்பிட்ஸ் தலைமையில் 25 டாக்டர் 15 மணி நேரம் இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்து அந்த இரட்டைக் குழந்தைகளை இரண்டாகப் பிரித்தனர்.அந்தக் குழந்தைகளின் கால்கள் இரண்டும் ஒட்டிக்கொண்டிருந்தன. அதுமட்டுமல்ல கால வலுவாகவும் இல்லை. சூம்பிப்போய் இருந்தது.

இதனால் என்ன செய்தனர் என்றால் அந்தக் காலை வெட்டி எடுத்துவிட்டு செயற்கைக்கால் பொருத்தினர். வெட்டி எடுத்த காலில் உள்ள திசுக்களை வீணாக்காமல் உடம்பில் பல்வேறு பகுதிகளை மூடுவதற்கு அவற்றை உபயோகப்படுத்தினர்.

மார்புக்குப் பக்கத்தில் எலும்பு ஒட்டிக்கொண்டிருந்தது. அதை மிகவும் கவனமாக வெட்டவேண்டும். ஏனென்றால் இதயம், நுரையீரல் எல்லாம் அங்கேதான் உள்ளன. அதனால் அந்த எலும்புகளை மிகவும் கவனமாக வெட்டிப் பிரித்து அவரவர் இதயம், நுரையீரல போன்றவற்றை அவரவர் உடலில் வைத்து மூடினார்கள். இப்படி அறுவை சிகிச்சையை ஆரம்பித்து 8மணி நேரம் ஆகிவிட்டது. இந்த சமயத்தில் அவர்களுக்கு இனனொரு பிரச்சினை! என்ன தெரியுமா? அந்த இரடடைக் குழந்தைகளில் ஒரு குழந்தையின் சிறுநீரகக் குழாய் இன்னொரு குழந்தையின் சிறு நீரகப் பையில் சென்றுமுடிவடைகிறது.

எனன செய்வது?உடனே 25 டாக்டர்களும் மீண்டும தீவிரமாக ஆலோசனை செய்து அந்த அறுவைச் சிகிச்சையை மீண்டும் ஓர் 7 மணிநேரம் நீடித்தனர். அதுவும் முடிந்தது. 15 மணிநேர அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு தான் டாக்டர்களுக்கு நிம்மதி. இது ஒரு வெற்றிகரமானஅறுவைச் சிகிச்சை.

அந்த இரண்டு குழந்தைகளும் தனித்தனியே ஆனாலும் கூட ஒருவர் மீது மற்றவருக்குள்ள பாசம் குறையவில்லையாம். அளவு கடந்த பாசம் அவர்களுக்குள்ளே ஒருவன் நோயாளியானால் மற்றவனும் நோயாளியாகி விடுவானாம். ஒருவனிடம் பேச்சுக் கொடுத்தால் அவன் பதில் கூறிக்கொண்டிருக்கும் போதே அடுத்தவன் குறுக்கே புகுந்து மீதிப் பதிலைக கூறிவிடுவானாம். இருவரும் ஒரே மாதிரி சிந்திக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறதாம்.

ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் பிரிப்பது இப்போது சாத்தியம்தான் இருந்தாலும் எந்த அளவு ஒட்டிப்பிறந்திருக்கின்றனர் என்பதைப் பொறுத்து அவர்களது ஆயுள் அமையும். தலைகள் ஒட்டிப் பிறந்தால் பிரிக்க முடியாது. நாமெல்லாம் ஒட்டிப்பிறக்கா விட்டாலும் கூட அப்படி ஒரு நெருக்கமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வது உண்டு சார்... நாங்கள் இருவரும் கூடப் பிறக்காத இரட்டைப் பிள்ளைகள் சார் என்று கூறுவது உண்டு அவ்வளவு நெருக்கமாம்.

ஒருவன் சொன்னான் சார்... நாங்கள் இருவரும் ஒரு தாய வயிற்றில் பிறக்கவில்லை என்றாலும் கூட ஒட்டிப பிறந்த இரட்டைக்குழந்தைகள் மாதிரி சார். ஒரே மாதிரி சிந்திப்போம். ஒரே மாதிரி நடப்போம். பிரியவே மாட்டோம். அவன் எங்கே இருக்கிறானோ நானும் அங்கேதான் இருப்பேன் என்றான். சரி... அவன் எங்கே இருப்பான்? என்று கேட்டேன் வேலூர் ஜெயிலில் என்கிறான்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# சர்வதேசத்தின் மிரட்டல்களுக்கு தலைவர் ஒருபோதும் பணிந்துவிடமாட்டார் !

## இப்படிக் கூறுகிறார் கேணல் பானு



(கிளிநொச்சி)

சர்வதேசத்தின் மிரட்டல்களுக்கு எமது தலைவர் ஒருபோதும் பணிந்துவிட மாட்டார் என்று மட்டக் களப்பு மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானுதெரிவித்துள்ளார்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் காலத்தில் களமுனைப் போராளிகளால் எழுதப்பட்ட "நெருப்பில் நின்று" எனும் கவிதைத் தொகுதி நூல் மட்டக் களப்பில் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரவினரால் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணன் மிசனில் இந்நிகழ்வு நடைபெற்றது.ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கேணல் பானு சிறப்புரை ஆற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

இன்றைய சூழ்நிலையில் எமது பிரச்சினையின் உண்மைத்தன்மையை சர்வதேசம் விளங்கியிருக்கிறது. ஆனாலும் சர்வதேசம் பாரபட்சமான முடிவுகளையே எடுத்திருக்கிறது. அவர்களின் இந்த முடிவுகளுக்கும் மிரட்டல்களுக்கும் எமது தலைவர் ஒருபோதும் பணிந்துவிடமாட்டார்.

விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரையில் நாம் யாரிடமும் கைஏந்தவில்லை. போராட்டத்தை நகர்த்துவதற்கான பொருளாதாரப் பலம், ஆளணிப் பலம் அனைத்துமே எமது மக்களிடம் இருந்தே வருகிறது என்றார். (க)

# சுவிசில் தமிழ்ப் பெண்கள் கவன ஈர்ப்பு போராட்டம்





(கொழுமபு)


ஈழத் தமிழ்ப்பெண்கள் மீது இலங்கை அரசின் இராணுவத்தினர் தொடர்ந்து நடத்திவரும் மனித உரிமை அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்து மாபெரும் பேரெழுச்சியான கவன ஈர்ப்புப் போராட்டம் சுவிற்சர்லாந்தின் சூரிச் மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்ப்பெண்கள் மீதான அட்டூழிய வன்முறைகளை தடுக்க சுவிற்சர்லாந்து அரசும் யுனிசெப் நிறுவனமும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சுவிற்சர்லாந்து தமிழ்ப்பெண்கள் அமைப்பினரினால் இக் கவன ஈர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சுவிற்சர்லாந்தின் தலைமைச் செயலக நிறைவேற்று பணிப்பாளர் திருமதி அலக்சன்ரா றோ சிற்றியிடம் சுவிற்சர்லாந்து தமிழ்ப்பெண்கள் அமைப்பின் தலைவர் புஸ்பராணி செந்தமிழ்ச் செல்வன் கோரிக்கை மனுவை கையளித்தார். (க)

# மாவீரர் கிண்ணத்துக்கான போட்டிகள்









தேசிய மாவீரர் கிண்ணத்துக்கான போட்டிகள் 15 ஆவது தடவையாக சுவிஸ் பாசல் மாநிலத்தில் கடந்த 1,2ஆம் திகதிகளில் நடைபெற்றுள்ளன.

இரு நாட்களும் தேசியக்கொடியேற்றல், அகவணக்கம், ஈகைசுடர் ஏற்றல், மலர்வணக்கத்துடன் ஆரம்பமான போட்டிகளில் 1ஆம் திகதி சனிக்கிழமை வளர்ந்தோர் மற்றும் 15, 11 வயதுப் பிரிவினருக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டிகள் நடைபெற்றன.

2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று 19,17,13,த9 வயதுப் பிரிவினருக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் பெண்கள் ஆண்கள் இருவருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் 10வது ஆண்டாக மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மக்களை மகிழ்விக்கும் நிகழ்வுகளாக சங்கீதக் கதிரை, துப்பாக்கி சுடும் போட்டிகளும் நடைபெற்றன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்வையாளர்களாக கலந்து சிறப்பித்த இப் போட்டியில் பல வகையான தாயக உணவு வகைகளுடன் பழங்கள், இளநீர் குளிர்பானங்களும் மற்றும் விளையாட்டுப்பொருட்களும் விற் பனைக்கு இருந்தன.

வெற்றியீட்டிய கழகங்களுக்கும் வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (க)

# வயோதிப மாது மரணம்

(துன்னாலை)

மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்து பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் அதிலிருந்து தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

மந்திகை கருகம்பனையைச் சேர்ந்த முருகன் பூமணி (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (க-101)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 19

முருக-தனுஷ்கோடி



### வேலை முடிந்தது; கைது செய்!

அன்று இரவு மதுரையை அடைந்த காமராஜ் மதுரை காங்கிரஸ் தலைவர்களையும் ,ஊழியர்களையும் சந்தித்துக் காங்கிரஸ் போராட்டத் திட்டத்தையும் அதனைச் செயல் படுத்த வேண்டிய வழிமுறைகளையும் கூறினார். பி.எஸ். குமாரசாமி ராஜாவும் அங்கே வந்து காமராஜுடன் கலந்து கொண் டார்.

அதன் பின்னர் காமராஜ் விருதுநகர் செல்வது என்றும், கல்யாணராம ஐயர் மட்டும் திருநெல்வேலிக்குச் சென்று காரியத்தை முடித்துவிட்டு முடிந்தால் சேலம், கோயம்புத் தூர் ஆகிய மாவட்டங்களுக்கும் சென்ற பின்னர் தம் ஊருக் குத் திரும்ப வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. கல்யா ணராம ஐயரிடம் பணம் இல்லை. காமராஜிடம் ஒன்றிரண்டு ரூபாய்களே இருந்தன. குமாரசாமி ராஜா தன்னிடமிருந்த 15 ரூபாய்ப் பணத்தைக் கொடுத்துக் கல்யாணராம ஐயரைத் திருநெல்வேலிக்கு அனுப்பினார். அவரும் தூத்துக்குடிக்குச் சென்று செயலை முடித்துக்கொண்டு பணம் பற்றாக்குறையினால் மற்ற இரு மாவட்டங்களுக்கும் செல்ல முடியாத நிலையில் தம் சொந்த ஊரான ராணிப்பேட்டைக்கே திரும்பிச் சென்றார். அங்கு அவர் தம்முடைய வீட்டிற்குள் நுழையும் முன்பே பொலிஸாரால் அழைத்துக்கொண்டு போகப்பட்டார் . பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாக்கி வேலூர் சிறையில் முதல் ஆளாக அடைக்கப்பட்டார். பின் னர் தஞ்சை சிறைக்கு அவர் மாற்றப்பட்டார்.

காமராஜ் மதுரையில் இருந்து ரெயிலில் விருதுநகருக்குப் புறப்பட்டார். விருதுநகருக்கு 2 மைல் முன்னால் உள்ள ரெட்டியார் பட்டியில் இறங்கிக்கொண்டு விருது நகரில் உள்ள எங்களுக்கு சொல்லி அனுப்பினார். நானும் நண்பர்களும் ரெட்டியார்பட்டி போய் தலைவரைச் சந்தித்தோம். பின்னர் அங்கிருந்து நடந்தே இரவு 12 மணி அளவில் விருதுநகர் வந்தோம்.

வழிநெடுக, காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானத்தை விளக்கிக்கொண்டே தலைவர் வந்தார்.

விருதுநகர் பொலிஸ் ஸ்டேஷனின் பின்புறமாக புல்லக்கோட்டை ரோடு வழியாகக் காமராஜ் வீட்டை எல்லோரும் அடைந்தோம். பிறகு, நாங்கள் தலைவரிடமிருந்து விடைபெற்றுக் கொண் டோம்.

பம்பாய்க்குப் போய் வந்தபின் முதல் முறையாகக் கடமையனைத்தையும் முடித்த திருப்தியுடன் அன்று இரவு முழுமையும் அவர் நன்றாகத் தூங்கினார்.

### 10.பாதுகாப்புக் கைதி

மறுநாள் ஆகஸ்டு 16ஆம் திகதி காலையில் அவரே உள்ளூர்ப் பொலிஸாருக்கு நண்பர் ஜெய ராம ரெட்டியார் மூலமாகத் தகவல் அனுப்பினார். தாம் கைதாவதற்குத் தயாராக இருப்பதாக! உட னடியாக அவரிடம் ஓடி வந்தார் ஓர் இன்ஸ்பெக்டர்! அவர் பெயர் எழுத்தச்சன்; நல்ல தேசியவாதி.

அவர் சொன்னார் காமராஜ் நீங்கள் ஒன்றும் அவசரப்படவேண்டாம்! உங்களைக் கைது செய் வதற்காக வாரண்டுடன் வந்தபொலிஸ்கார் இப்போது அரியலூர் சென்றிருக்கிறார். அவர் வரும் வரை நீங்கள் மேலும் சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் யாரிடமும் மூச்சு விடமாட்டேன் என்றார் பரிவோடும் பணிவோடும்.

அதற்கு சிறைக்கு அஞ்சாத சிங்கத் தலைவர் தமது வாழ்நாளில் பொன்னான இளமைப் பரு வத்தில் 9ஆண்டுகளை சுமார் 3000 நாட்களைச் சிறையில் கழித்த தவத் தலைவர் காமராஜ் கூறினார்.

"என்னால் செய்யக்கூடிய பணிகள் அனைத்தையும் சிறப்புறச் செய்து முடித்துவிட்டேன். இனி நான் மட்டும் ஏன் வெளியே இருக்க வேண்டும் என் அருமைத் தலைவர்கள் எல்லாரும் கண் காணாச் சிறைகளில் வாடும் போது , நான் மட்டும் இங்கே சுகமாக ஓய்வெடுப்பதா? அடிமை நாட் டில் அடிமைக்குச் சுகமேது? சுதந்திரம் இல்லாத நாட்டில் சிறையில் இருப்பதுதான் விடுதலை வீரர்களுக்கு சுகானுபவம் வெளியே இருப்பதுதான் சித்திரவதை! ஆகவே என்னை உடனே கைது செய்து சிறைக்கு அனுப்புங்கள்" என்றார்.

இன்ஸ்பெக்டர் எழுத்தச்சன் விக்கித்து நின்றார். அவரது தேசிய உள்ளம் பெருமையால் விம்மிற்று! மெய் சிலிர்த்தது! தம் காக்கிச் சட்டையைக் கழற்றியெறிந்து விட்டுத் தாமும் அவருடன் சிறைக்குச் சென்று விடலாமா எனச் சித்தித்தார் ஒரு கணம்! மறு கணம் கடமை உணர்வால் உந்தப்பட்டு- தமிழர்களின் தவத் தலைவனை- காந்திஜியின் கடைசி வாரிசை -கைதுசெய்யும் பெரும்பாக்கியமாவது தனக்குக்கிடைத்ததே என்ற களிப்பில் காமராஜைக் கைதுசெய்து வேலூர் சிறைக்குக் அனுப்பினார். காமராஜ் பெட்டி நிறையப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு பொலிஸ் வானில் புறப்பட்டார். வேலூரிலிருந்து காமராஜ் அமராவதி சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கு தான் எல்லா அனைத்திந்தியத் தலைவர்களும் அடைக்கப்பட்டிருந்தனர். சில ஆண்டுகள் கழித்து மீண் டும் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

காமராஜ் கைது செய்யப்பட்ட மறுநாளில் விருதுநகர் முனிசிபல் கவுன்சில் கூட்டம் நடைபெற் றது. காந்திஜி, நேருஜி மற்றும் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கவுன் சிலில் நான் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்மொழிந்தேன். ஓ.டி.பி. ராமையா நாடார் வழிமொழிந்தார். கவுன்சில் கூட்டத்திற்கு வைசேர்மன் ரா. குருசாமி தலைமை வகித்தார். நான் கொண்டுவந்த கண்டனத் தீர்மானம் கவுன்சிலில் நிறைவேறியது. கண்டனத் தீர்மானத்தின் நகலை முனிசிபல் கமிஷனர் கலெக்டருக்கு அனுப்பியிருந்தார். எங்களைக் கைது செய்யும் படி உத்தரவிட்டார். கலெக்டர் தீர்மானத்தை முன் மொழிந்த என்னையும், வழிமொழிந்த ராமையா நாடா ரையும் , தலைமைவகித்த குருசாமியையும் பொலிஸார் கைதுசெய்து சிறைக்கு அனுப் பினார்கள். 1945ல் இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்து வெள்ளையரும் வெற்றி பெற்றிருந்தனர். இது வரை பாதுகாப்புக் கைதிகளாக எந்தவித விசாரணையுமின்றிச் சிறை வைக்கப்பட்டிருந்த தலைவ ர்கள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்கள். தலைவர் காராமஜும் விடு தலையானார். ஆகஸ்டுப் புரட்சி வீரர் காமராஜின் கடைசிச் சிறைவாசமும் இதுதான்.

### 11.கொள்கையில் உறுதி

1945ல் காமராஜ் விடுதலையாகி வெளியில் வந்த நேரம்! ஒரு நாள் பிற்பகல் வேளை திருநெல்வேலி ரெயில் நிலையத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது. ரெயிலில் வரும் காமராஜை வரவேற்க கையில் மாலையுடன் பெரிய மனிதர்கள் காத்து நிற்கின்றனர் .ரெயில் வந்து நின்றது!... காமராஜ் இறங்குகிறார்.

(தொடரும்)

# லக்மல் சம்பத் குறித்து 25 பேரிடம் விசாரணை!

(கொழும்பு)

சிங்கள ஊடகவியலாளரான லக்மல் சம்பத் கொலை தொடர்பாக 25 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லக்மல் சம்பத் கொலைக்கு 3.8 பிஸ்டல் பயன்படுத்தப்படிருக் கக் கூடும் என்றும் அவருக்கு இதற்கு முன்னர் எதுவித அச்சுறுத்தலும் இருந்தது இல்லை என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சத்தின நாளேட்டில் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக கட்டுரை களை அவர் எழுதி வந்தார். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை, லக்மல் சம்பத் கொலைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த 16 மாதங்களில் 4 ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய 6 ஊட கப்பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக கொல் லப்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை வழக்கில் எதுவித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்த இயக்கம் வெளியிட்டுள்ள கண் டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் ஊடகப் பேரவையும் லக்மல் சம்பத் கொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. (க)

# செய்தித் துளிகள்

## மஹோற்சவம்

(துன்னாலை)

துன்னாலை வெல்லிக்கந் தோட்ட பிள்ளையார் ஆலய வரு டாந்த மஹோற்சவம் கடந்த முத லாம் திகதி சனிக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி சனிக் கிழமை வேட்டைத் திருவிழாவும், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் த்திருவிழாவும், 10ஆம் திகதி திங் கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (க-101)

✻ ✻ ✻

(துன்னாலை)

பொலிகண்டி கந்தவனம் சிறி சுப்பிரமணியர் ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 10ஆம்திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 11ஆம்திகதிசெவ் வாய்க் கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று திருவிழா நிறைவுபெறும். (த-101)

✻ ✻ ✻

(துன்னாலை)

சிறுப்பிட்டி செல்லப்பிள்ளை யார்ஆலயவருடாந்த மஹோற்சவம் கடந்த 30ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை வேட் டைத்திருவிழாவும், 8ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 10ஆம்திகதிதிங் கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். மறுநாள் மாலைவள்ளிதெய் வயானை திருக்கல்யாண உற்சவ மும் இடம்பெறவுள்ளது. (த-101)

✻ ✻ ✻

(பருத்தித்துறை)

சரித்திர பிரசித்தி பெற்ற பொலி கண்டி கந்தவன ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 27 ஆம் திகதி கொடியே ற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் , 10ஆம் திகதி இர தோற்சவமும், 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று மாலை 5 மணிக்கு நடைபெறும்கொடியிறக்கத் துடன் மஹோற்சவம் முடிவு பெறும்.

இத்திருத்தலம் அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய " திருப் புகழ்" சிறப்புப் பெற்ற தலம் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (க-52)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலை காரணமாக சைவ நெறித் தேர்வு 2006ற்குரிய விண்ணப் பங்கள் ஏற்கும் முடிவுத் திகதியாக 17.07.2006 எனத்தீர்மானிக்கப் பட் டுள்ளது. (க)

## நியமனம்

(துன்னாலை)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள மருதங்கேணி கோட்டத் திற்கு த.தபேந்திரராஜா கோட்டக் கல்வி அதிகாரியாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச் சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் வல்லை சிதம்பராக் கல்லூரியில் அதிபராக பணி புரிந் துள்ள இவர், கடந்த 26ஆம் திகதி தனது பதவியை பொறுப்பேற்றார்.

இதேவேளை, முன்னர் மருதங் கேணி கோட்டத்தில் அதிகாரியாக பணிபுரிந்த் இரகுநாதன் பருத்தித் துறை கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியேற்றதையடுத்தே மேற்படி நியமனம் இடம்பெற்றது எனவும் அறியப்படுகிறது. (த-101)

## படையினரால் தாக்கப்பட்ட இருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

படையினரால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் இரு இளை ஞர் கள் யாழ் .போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

நீர்வேலியைச் சேர்ந்த எஸ். சதீ சன் (வயது-29), கொக்குவிலைச் சேர்ந்த ரி. ரமிதாஸ்(வயது- 30 ஆகியவர்களே படையினரால் தாக் கப் பட்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (க-132,133)

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

(கற்கோவளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தின் பருத்தித்துறைப் பிரிவினர் நேற்று முதல் நாளை வரை அவசர முதலுதவிப் பயிற்சி வகுப்பொன் றை பருத்தித்துறை ஆதாரவைத் தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடாத்தவுள்ளனர்.

இவ்வகுப்பில் 25 தொண்டர் கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் இவர்களுக்கான உணவு ,தங்குமி டவசதி, போக்குவரத்து வசதி மற் றும் பயிற்சிக்காலத்திற்கான கொடுப்பனவும் வழங்கப்படவுள்ள தாகவும் இச் சங்கத்தின் பருத்தித் துறைப் பிரிவுத்தலைவர் சூ.தவ ராசா தெரிவித்தார். (க-104)

## திருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ். குருநகர் புனித கார்மேல் அன்னையின் வருடாந்த திரு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16ஆம்திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் மாலையில் திருச்சொரூப தேர்ப்பவனியும் இடம் பெறவுள்ளது. (த-72)



'லட்சியம்'
லாரன்ஸ் – சார்மி

## கல்லூரி விழாவான படபூஜை



கலைப்புலி தாணுவின் மகன் கலாபிரபு இயக்கும் 'சக்கர கட்டி' படத்தில் பாக்யராஜின் மகன் சந்தனு கதாநாயகனாக நடிக்கிறார். இவருடைய ஜோடியாக ஷிவி, இஷிதா ஆகியோர் நடிக்கிறார்கள். இதன் பட பூஜை சமீபத்தில் ஏவி.எம்.ஸ்டுடியோவில் நடந்தது.

கே.பாலசந்தர், விஜய், ஏ.ஆர்.ரகுமான், குஷ்பு, சுந்தர்சி, தாணு உட்பட பலர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ – மாணவிகளின் பெரும் கூட்டத்தைக் கண்ட திரை உலக பிரமுகர்கள் 'இது கல்லூரி விழாவா...' என்று பிரமித்துவிட்டனர்.

வந்தவர்கள் சாந்தனு – அவருடைய அக்கா சரண்யா ஆகியோர் படிக்கும் இரண்டு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ – மாணவிகளாம். நட்புக்குக் கிடைத்த பெருமை.

**'சதா' படப்பிடிப்பின் போது அதிகம் பேசுவது இல்லை என்று முடிவு செய்திருக்கிறாராம்.**

## லைலாவுக்கு தடை




'திருப்பதி' படத்தில் ஒரு பாட்டுக்கு ஆடிய லைலாவுக்கு, அது போல ஒத்தை ஆட்டத்துக்குப் பல தயாரிப்பாளர்களிடம் இருந்து அழைப்பு வந்ததாம்.

படத்தில் நடிக்காமல் சும்மா இருப்பதைவிட 'ஆட்டம் போட்டுப் பணம் சம்பாதிக்கலாம்' என்ற ஆசையில் ஒரு ஆட்டத்துக்கு ஒரு படத்துக்குக் கிடைக்கும் அளவில் 'ரேட்' நிர்ணயம் செய்யலாம் என்று லைலா முடிவு எடுத்தாராம்.

ஆனால் லைலாவின் கணவர் 'ஒத்தை ஆட்டம் போட வேண்டாம்' என்று தடை விதித்து விட்டாராம். இதனால் லைலாவின் ஆட்டம் தற்காலிகமாக தடைப்பட்டு நிற்கிறது.



கிழக்கு கடற்கரை சாலை'
ஸ்ரீகாந்த் – பாவனா



'பொறி'
ஜீவா – பூஜா

விஜய் அடுத்து நடிக்கும் படத்தில் அவரது ஜோடியாக அசின் மீண்டும் நடிக்கப்போகிறார் என்று கூறப்பட்டது. அது என்ன படம் என்பது முடிவாகாமல் இருந்தது.

இப்போது பங்காரம் தெலுங்கு படத்தை தமிழில் தயாரிப்பது என்றும், அதில் விஜய் நடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் விஜயின் ஒரு ஜோடியாக அசினும் மற்றொரு ஜோடியாக மல்லிகா கபூரும் நடிக்கப் போகிறார்கள் என்று கோடம்பாக்க வட்டாரம் கூறுகிறது.

## அதிர்ச்சி




சமீபத்தில் திரைக்கு வந்துள்ள 'திருட்டுப் பயலே' படத்தில் சோனியா அகர்வால் கவர்ச்சியாக நடித்துள்ளார்.

இந்தப் படத்தைப் பார்த்த சோனியா அகர்வாலின் போய்பிரண்ட் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தார்களாம்.

அது பற்றி அவரிடம் சொன்னபோது. 'படத்தில் நடிப்பது என் விருப்பம்' என்று பதில் வந்ததாம். திருமணம் தாமதம் ஆவதால் ஏற்பட்ட ஆத்திரத்தில்தான் இப்படி அவர் பேசுகிறார் என்கிறது கோடம்பாக்கம்.

## நயன்தாரா மறுப்பு




'வல்லவன்' படத்தை இயக்கி நடிக்கும் சிம்புவுடன் நயன்தாராவுக்கு நெருக்கம் ஏற்பட்டு இருப்பதாகவும், இருவரும் சேர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததாகவும் சினிமா வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

மயிலாடுதுறையில் போட்டியிடும் தனது தந்தைக்காக சிம்பு அங்கு பிரசாரத்துக்குச் சென்றார்.

அப்போது நயன்தாராவையும் தன்னுடன் பிரசாரத்துக்கு வரும்படி அழைத்ததாகவும் 'அய்யோ.. அரசியல் எனக்கு வேண்டாம்' என்று நயன்தாரா மறுத்துவிட்டதாகவும் கோடம்பாக்கத்தில் புதிய பரபரப்பு உலாவருகிறது.

**நமீதாவுக்கு வரும் கடிதங்களில் காதல் கடிதங்களும், அவரது அழகைப் புகழும் கடிதங்களும்தான் அதிகமாம்.**



'பீமா'
விக்ரம் – திரிஷா

நல்ல எண்ணங்கள், நல்ல மொழிகள், நல்ல செயல்கள் இவற்றிலுள்ள சக்தி அளவற்றதாகும். அதேயே நாம் பயன்படுத்த வேண்டும்.

-ராஜாஜி

வலம்புரி

## ஜனாதிபதியின் உத்தரவை படைத் தரப்பு கடைப்பிடிக்குமா?

படையினர் யாரையேனும் கைது செய்வதாக இருந்தால் கைது செய்வதற்குரிய ஒழுங்கு முறைகளைப் பின்னபற்ற வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி விடுத்த இவ்வுத்தரவு உண்மையில் பாராட்டப்பட வேண்டியது.

படையினர் ஒருவரைக் கைது செய்வதாகவிருந்தால் அதற்கான சட்டவரையறைகளை பின்பற்றியே அதனைச் செய்தாக வேண்டும். இதனைக் கடைப்பிடிப்பதில் படைத் தலைமைகள் தயாரில்லை.

சீருடை அணிந்து விட்டால் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எதையும் செய்யலாம் என்பதே இலங்கையில் படையினரின் நிலைப்பாடு.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கைதுகளும் காணாமல் போன நிகழ்வுகளும் நடந்துபோனமைக்கு இது காரணம் எனலாம்.

சட்டத்தை மீறும் படையினருக்குத் தண்டனை வழங்காமல் அவர்களைத் தட்டிக் கொடுத்ததன் விளைவாகவே எத்தனையோ குடும்பங்கள் வாழ்க்கை சுகந்தத்தைத் தொலைத்துவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றன.

படையினர் என்பதற்காக வழங்கப்பட்ட சலுகைகள் மனித உயிர்களை காவுகொண்டது. இதன் வழியாக இனவாதச் சிந்தனை அனைத்துத் தரப்பிலும் புரையோடியது. இதுவே உண்மைநிலை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் சிங்கள ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். சட்டத்தை மீறியதாக குற்றஞ்சாட்டி ஒருவரைக்கைது செய்யும் போது சட்டப்படியல்லவா கைது செய்ய வேண்டும்? கைது செய்வதில் சட்டம் மீறப்பட்டால் கைது செய்தவரையும் கைது செய்வதே அரச நீதி.

நாடாளும் அரசனுக்கும் நாட்டு மக்களுக்கும் நீதி ஒன்று இருப்பதையே மொழி வழித் தோன்றிய பழங்கதைகள் போதிக்கின்றன. அவற்றை எல்லாம் கதையாகக் கற்றுக் கொண்டதன் காரணமாக அரச படையினரால் கைதுசெய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் புதைகுழிக்குள் புதைந்து போயுள்ளனர்.

இத்தகையதோர் அவல நிலை மீண்டும் தோற்றம் பெறும் கட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'கைது' விடயத்தில் இறுக்கமான கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் பிறப்பித்துள்ளார்.

கடந்த காலங்களில் பதவியிலிருந்த ஜனாதிபதிகள் செய்யாத வேலையை மகிந்த செய்தார் என்பதற்காக அவரைப் புகழ்ந்து கொள்ளலாம்.

ஆனால் ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவை படைத் தரப்பு எந்தளவு தூரம் கடைப்பிடிக்கும் என்பதே கேள்விக்குறி.

கைது செய்யும்போது அதற்கான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என உத்தரவிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உத்தரவை படைத் தரப்புக் கடைப்பிடிக்கின்றதா என்பதையும் அவதானித்துக் கொள்ள வேண்டும்.

உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு பாராமுகமாகவிருந்தால் அவ்வுத்தரவுகள் உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவிவிடும் மாயாஜாலம் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

# பொருளாதார இராணுவ விடயங்களில் இந்தியா எமக்கு சார்பாகவேயுள்ளது

## என்கிறார் மங்கள சமரவீர



(கொழும்பு)

பொருளாதார இராணுவ விடயங்களில் இந்தியா எமக்குச் சார்பாகவேயுள்ளது என்று இலங்கை வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு அவர் கூறியுள்ளார். அவர் அது பற்றி அந்த ஊடகத்துக்கு மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கை விடயத்தில் இந்தியா சிறிது எச்சரிக்கையுடன் செயற்படுவதற்கு நியாயமான காரணம் இருக்கிறது. எமது நாட்டுக்காக தங்களது இராணுவத்தினரை அவர்கள் இழந்துள்ளனர். அவர்கள் இங்கிருந்து முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டனர். இலங்கை விடயத்தில் இந்தியா விலகியிருப்பதற்கு நியாயமான காரணங்கள் அவர்களுக்கு உண்டு. ஆனால் இலங்கைக்கு உதவுவதற்கு அந்த இடைவெளி தடையாக இல்லை.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் இராணுவ விடயங்களில் எமக்குச் சாதகமான நிலையில் இந்தியா உள்ளது. இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம். போரின் மூலம் தீர்வு காண்பது சரியான வழி அல்ல என்பதை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளோம். தென்னிலங்கையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் எமது முயற்சியை இந்தியா பாராட்டியுள்ளது.

ஜெயவர்த்தன ,பிரேமதாச, சந்திரிகா, குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகிய அனைவருமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தனர். ஆனால் என்ன நடந்தது? தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து உருவாக்கப்படாததால் முட்டுக்கட்டை ஏற்பட்டது.நாம் இப்போதும் பேச்சுகளுக்கு வருமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். விடுதலைப் புலிகளுக்கு சர்வதே சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும். விடுதலைப் புலிகள் மறுக்கின்ற போதும் தமிழ்மக்களின் நியாய பூர்வமான முறைமைகளுக்கு தீர்வு ஏற்படுத்தவுள்ளோம்.

தென்னிலங்கைப் பகுதியில் 53 விழுக்காடு தமிழர்கள் வாழ்கின்றனர். விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் ஏழ்மையான நிலை உள்ளது. முழுமையான அரசியல் உரிமை பெற்ற இனமாக தமிழர்கள் உள்ளனர். விடுதலைப் புலிகளின் பகுதிகளில் கட்டாய அறவிடல் மேற்கொள்ளப்படுகிறது. சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் கங்காரு நீதிமன்றங்களில் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் ஐக்கிய தேசியக் கட்சி எம்மிட மிருந்து விலகி இருந்தது. ஆனால் இம்முறை அரசியல் விளையாட்டுக்களை மேற்கொள்ளமாட்டோம் என்று அக் கட்சியின் தலைமை தெரிவித்துள்ளது.

நாம் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகள் இந்தப் பிரச்சினையில் ஒரு பங்கேற்பாளர்கள் தான். அவர்களை தவிர்த்துவிட்டு நாம் செல்ல முடியாது. ஆனால் நாம் முன்வைக்கிற தீர்வை விடுதலைப் புலிகள் நிராகரிக்கும் போது நாம் நேரடியாக தமிழ் மக்களிடம் தான் செல்ல வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காகப் போராடவில்லை என்பதை சர்வதேச சமூகம் இப்போது உணர்ந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் சொந்த செயற் திட்டத்துக்காக போராடுகின்றனர். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினரை வெளியேறச் சொல்லும் விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அரச சார்பற்ற நிறுவனத்தையும் வெளியேறச் சொல்லவேண்டும் என் றார். (க)

## பாதுகாப்பு நடவடிக்கைகள் தமிழர்களையே பாதிக்கின்றன

### சிவநேசன் எம்.பி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலே அமைச்சர்கள், படையதிகாரிகளின் பாதுகாப்புக்காக கொண்டு வரப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு நடைமுறைகள் சாதாரண தமிழ் மக்களின் பாதுகாப்பினையும், அன்றாட நடவடிக்கைகளையும் வெகுவாகப் பாதித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலே மேற்கொள்ளப்படும் பாதுகாப்புக் கெடுபிடி பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் வீதிச் சோதனைகளின் போது படையினர் தமிழ்மக்களை குறிப்பாகச் சோதனைக்குட்படுத்துகிறார்கள். தாமதப்படுத்துகிறார்கள். கொழும்புக்கு சிகிச்சைகளுக்கென வரும் நோயாளர்களும் அவர்களுக்கு உதவியாக வருபவர்களுங்கூட இத் தீவிர நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (க)

## இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி, நெல்லியடி, முடக்காட்டுச் சந்தியில் கடமையிலிருந்த படையினரை நோக்கி நேற்று முன்தினம் காலை இனந்தெரியாத சிலரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் நின்ற இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

துன்னாலையைச் சேர்ந்த தங்கராசா தர்மகுலசிங்கம் (வயது-30) , வேரவில் கொடிகாமத்தைச் சேர்ந்த இராசதுரை அகிலேஸ்வரன் (வயது -28) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இது குறித்து இரு இளைஞர்களினதும் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். (க-101)

## ஊடகவியலாளர்களுக்கு விரைவில் பாதுகாப்பு , ஓய்வூதியம் வழங்கப்படும்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இந்த சட்டமூலத்தை நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன் அடிப்படையில் ஊடகவியலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

சமூகப் பாதுகாப்புச் சபையின் மூலம் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒழுங்கு முறைகள் இந்த சட்டமூலத்தின் ஊடாக மேற்கொள்ளப் படவுள்ளது.

இது தொடர்பான பாராளுமன்ற விவாதம் சில தினங்களில் இடம்பெறவுள்ளது. (க)

## புனர்வாழ்வுக்கழக பணியாளர் கடத்தலுக்கு அரசே முழுப்பொறுப்பு

### அரியநேந்திரன் எம்.பி.தெரிவிப்பு

"தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கடத்தப்படுவது இது மூன்றாவது முறையாகும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்" என நாடாளு மன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்வாகரைப் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரி கிருஷ்ணபிள்ளை கமலநாதன் கடத்தப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்,

இது திட்டமிட்டுத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இல்லாமற் செய்யும் நடவடிக்கையாகும். மட்டக்களப்பில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை துணைக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும்போதே இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்தார்.

இராணுவம் மீதான தாக்குதல்களைப் புலிகள் நிறுத்தினால் கருணா குழுவினரின் தாக்குதல்களை நிறுத்துவதற்கு தான் பொறுப்பெடுக்க முடியுமென குறிப்பிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு கடிதம் ஒன்றைக் கடந்த 20 ஆம் திகதி தூதனுப்பியிருந்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது. (க)

## விடுதலைப் புலிகளின் காலக்கெடு இலகுவானதொரு விடயமல்ல!

### க.கா.குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நோர்டிக் நாடுகளின் கண்காணிப்பாளர்கள் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ள கருத்தினை தீவிரமாகவும் முக்கியமான விடயமாகவும் கருதுவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஓமர்ஸன் தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள தமிழ்ச்செல்வன், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளான டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகியவற்றின் கண்காணிப்பாளர்கள் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன் வெளியேற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கேட்டபோதே கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)



## சாயி அருளமுதம்

ஒவ்வொருவரும் தத்தமது பாதையைக் கடைப்பிடித்து வாழ்க்கையை சாயான முறையில நோக்கினால் வாழ்க்கை புனிதமாக்கப்பட்டு அதை ஒரு வணக்கத்திற்குரிய யாத்திரையாக மாற்ற முடியும். சோம்பல் உள்ள மூளை எல்லாவற்றையும மிகைப்படுத்தும். சந்தேகப் பிராணிகள் சமூகத்திற்கு ஊறுவிளைவிப்பார்கள். சிந்திக்காமல் விமர்சிப்பதால் இடைவெளிகள் அகலும்.மனித சகோதரத்துவத்தின் அடிப்படைத் தத்துவத்தை மட்டும் நங்கள் புரிந்து கொள்வீர்களானால் மனித சமுதாயம் சமாதானமும் ஆனந்தமும் நிரம்பிய பிரமாண்டமானதோர் குடும்பமாக விளங்கும்.

# யாழில் மாணவ சமூகத்திற்கு இராணுவத்தால் அச்சுறுத்தல்

## தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்வு இராணுவத்தினரால் முடக்கப்பட்டு கிடக்கின்ற நிலையில் பெரும் அச்சத்தோடு தமது நாளாந்த கருமங்களைத் தொடர்ந்து வருகின்ற குடாநாட்டு மக்களிடையே, உயிரைக் கையில் பிடித்தவாறு மாணவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்றுவருவதாக யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இராணுவ நெருக்குவாரங்களுக்குள்ளாகி தனது அன்றாட செயற்பாடுகளை நகர்த்திவந்தது. தினமும் பாடசாலை வளாகத்தின் உள்ளும் பாடசாலை சுற்றாடலிலுள்ளும் இராணுவம் ரோந்து செல்வதும் பாடசாலைக்குள் அத்துமீறி உள் நுழைவதும் மைதானத்தை பாவிப்பதிலோ துணைப்பாட விதானச் செயற்பாடுகளிலோ மாணவர்கள் பாடசாலைச் சூழலில் ஈடுபடுவதைத் தடுத்திருந்தது இராணுவம்.

நேற்றையதினம் பாடசாலை வளாகத்தினுள் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இராணுவம் அதிபர், ஆசிரியர்களை, மாணவர்களை மிக மோசமாக அச்சுறுத்தியதோடு பல மணி நேரமாக வீடியோப் படம் எடுத்துச் சென்றுள்ளனர்.

எந்நேரமும் இராணுவத்தினால் எதுவும் நிகழலாம் என அஞ்சிக் கொண்டிருந்த நிலையில் இராணுவம் ஆயுத முனையில் அராஜகம் நிகழ்த்தியது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கியுள்ளது.

இச் சம்பவத்தினை மாணவர்களாகிய நாங்கள் மிக வன்மையாகக்கண்டிக்கின்றோம். இராணுவ அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கும் இந்துக்கல்லூரிக்கும் ஏனைய பாடசாலைகளுக்கும் இராணுவத்தினரிடமிருந்து விடிவு கிடைப்பதை மாணவர்களும் ஏனைய கல்வி சமூகத்தினரும் எதிர்பார்க்கின்றனர். இன்றேல் பாடசாலைகளை மூடிவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலையே உருவாகும்.

எனவே இராணுவத்தரப்பு தனது உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்டதரப்புக்கள் இராணுவத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வேண்டுகின்றோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புகையிரத நிலையத்தில் பொலிஸார் கடும் சோதனை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிலிருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையும் புகையிரதங்களில் பயணம்செய்யும் பயணிகள்மீது பொலிஸார் கடுமையான சோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக இந்த நடவடிக்கை அதிகமாக இடம்பெற்று வருகின்றது. புகையிரத நிலையத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட பொலிஸார் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கோட்டையை புகையிரதம் வந்தடைந்ததும் பொலிஸார் புகையிரதத்தைச் சுற்றிவளைத்து யாரும் சுதந்திரமாக இறங்க முடியாத வண்ணம் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

இதன் காரணமாக பயணிகள் என்ன நடக்கின்றது என்று தெரியாது கடும் பதற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

அதிகாலையிலும் மற்றும் இரவிலும் இந் நடவடிக்கை கடுமையாக இடம்பெறுவதினால் எதுவும் தெரியாது பொதுமக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக தமிழ் மக்களே இந்தச் சோதனைகளுக்கு முழுமையாக உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். (க)

# வவுனியாவில் தமிழ் பெண்கள் இருவர் படையினரால் கைது

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் படையினரால் இரண்டு தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மகாரம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் செட்டிக்குளம் பகுதியில் வீட்டுப் பதிவுகளை மேற்கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வேப்பங்குளம் பகுதியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பரமேஸ்வரி ஜெசங்கர்(வயது-32), இந்திராணி செல்வம்(வயது-40) என அடையாளம் காணப்பட்டிருக்கும் இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் இவர்களின் ஒருவரின் செல்லிடத் தொலைபேசியில் விடுதலைப்புலிகளின் தொலைபேசி இலக்கம் இருந்ததாகவும் படையினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (க)

## பொலிஸ் காவலரண்மீது நேற்றுத் தாக்குதல்

அம்பாறையில் பொலிஸ் காவலரண் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அம்பாறை கொனகொல்ல உகனவில் உள்ள காவலரண்மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலையடுத்து பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். இதேவேளை ஊர்காவல் படையினரது உதவியுடன் இப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதல் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடம்பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளனர். (ச-5)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு 'ஔவையின் நூற்பயன்' என்னும் விடயம் பற்றி செல்வி றம்யா ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

(க-35)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண...

இதில் சகல அரசியல் கட்சிகளிலிருந்தும் தலா ஒரு உறுப்பினரைக் கொண்டு உருவாக்கப்படும். இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சித் தீர்வுக் குழுவிற்கு அனுசரணையாக அதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டிருக்கும்.

இந்த 12 நிபுணர்களைக் கொண்ட ஆலோசனை உப குழு சகல இனங்களின் பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருக்கும் என திட்ட அமுலாக்க அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சட்டவல்லுநர்கள், அரசியல் அமைப்பு வல்லுநர்கள், சிவில்அமைப்பு வல்லுநர்கள் உள்ளடங்கிய இக்குழு அதிகாரப் பகிர்வு அலகுகள், அதிகாரப்பகிர்வு எல்லைகள் உள்ளடங்களாக மிகவும் பரந்துபட்ட அதிகாரப் பகிர்வு முறையின் வரைபு ஒன்றை தயாரித்து அனைத்துக் கட்சி மாநாட்டில் இனப்பிரச்சினைக்கான அரசதரப்புத் தீர்வு முன்னோடியாக அதனை முன்வைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நடைமுறைகள் மூலமாகவே இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றினை நோக்கி நகர முடியும் என்பதே அரசின் நம்பிக்கை என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தமது தரப்புத் திட்டங்களை வரைபுகளை முன்வைப்பதற்கான கதவுகள் இன்னமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஏனெனில் கடந்த ஆறு மாதங்களாக புலிகள் தமது தரப்பு வரைபுகளை முன்வைக்க வேண்டும் என நாம்அழைப்பு விடுத்து வருகின்றோம்.

ஆனால் ஏதும் இதுவரை வந்துசேரவில்லை. இதனால் நாம் அக் கதவுகளை மூடிவிட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் மாத்திரம் தீர்வுத் திட்டம் குறித்து பேசுவதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாதுஎனவும் அவர் தெரிவித்தார். (ச)

## சாரதியைத்...

ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர் றெமிடியஸிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று மருதனார் மடத்தில் முகத்தினைக் கறுப்புத் துணியால் கட்டிய நிலையில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகள் இராணுவக் கட்டளைத் தளபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இது தொடர்பாக கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி உறுதியளித்தார்.

இதேவேளை தற்போது பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க தயாராகவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சந்திரசிறி தெரிவித்துள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழு சட்ட ஆலோசகர் றெமிடியஸ் தெரிவித்தார். (ச-133)

## உறங்கிக் கொண்டிருந்த...

(வயது-42) என்ற பெண்ணை கழுத்து நெரித்து கொலைசெய்து விட்டு அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இவருக்கு அருகில் உறங்கிக் கொண்டிருந்த இவரது 84 வயதான தாயார் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் இரத்தக் காயங்களுடன் பிரமை பிடித்த நிலையில் காணப்பட்டார். கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் முதுகுப்புறத்தில் கீறல் காயங்களுடன்காணப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். கைவிரல் அடையாளங்களும் மானிப்பாய் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது.

(து-15,133)

## யாழ்-இந்துக் கல்லூரி...

சம்பவம் குறித்து யாழ். இந்துக்கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலை 11.30 மணிக்கு கனரக வாகனங்களில் மோப்ப நாய்கள் சகிதம் வந்திறங்கிய பெருமளவான இராணுவத்தினர் எமது கல்லூரியின் முகப்பின் அருகே குவிந்து காணப்பட்டனர்.

விடயம் அறியாத கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பயத்தின் காரணமாக வகுப்பறைக்குள் முடங்கிக் காணப்பட்டனர்.

திடீரென மோப்ப நாய்களுடன் உள்நுழைந்த ஆயுதம் தாங்கிய படையினர் பாடசாலை கட்டடம் எங்கும் சல்லடை போட்டு தேடுதல் நடத்தியதோடு அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களை அச்சுறுத்திப் புகைப் படம் எடுத்தனர். பின்னர் பாடசாலைக்கு அருகே குண்டு ஒன்றையும் வெடிக்க வைத்தனர்.

படையினரின் இத்தகைய செயற்பாட்டினால் கல்லூரி அல்லோலகல்லோலப்பட்டது. படையினர் மாணவர்களின் உடைமைகளைச் சோதனையிட்டதோடு மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்தனர்.

எனவே சர்வதேச சமூகத்தினர், மனித உரிமைகளைக்கண்காணிப்பவர்கள், தொண்டு நிறுவனத்தினர் அரசினரால் ஏவிவிடப்பட்டிருக்கும் படையினரின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து எமது சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு உறுதிப்படுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,133)

## கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வு...

கழக கலைப்பீட ஒன்றியத் தலைவர் குருஷோத்தமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்.பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் குமாரவடிவேல், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி உப அதிபர் அலோசியஸ், உயர் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் இராஜரட்ணம், ஆசிரியர் சங்கத் தலைவர் சிவானந்தமூர்த்தி, மருத்துபீடப் பேராசிரியர் டாக்டர் சிவபாலன் ஆகியோர் ஏற்றி வைக்கத் தமிழீழத் தேசியக் கொடியை மாணவர் ஒன்றியத் தலைவர் ஏற்றினார்.

ஈகச் சுடரை பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாரஞ்சன் ஏற்றி வைத்தார். சிறப்புரையை கலாநிதி சண்முகலிங்கம், வணிகத் துறைப் பேராசிரியர் தேவராஜா மற்றும்பதில்துணைவேந்தர்ஆகியோர்நிகழ்த்தினர்.

*கிளிநொச்சி*

தமிழீழ நிதித்துறையின் ஆளுகையின் கீழ் இயங்கும் இளந்தென்றல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

இளந்தென்றல் நிறுவன ஆளுகைப் பிரிவுப் பொறுப்பாளர் தாயகன் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழின்பன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை நிதித் துறைக் கணக்காய்வாளர் குறிஞ்சி ஏற்றினார். ஆயப் பகுதிப் பணிப்பாளர் இளங்குமரன் ஈகச் சுடரினை ஏற்ற மலர் மாலையினை இளந்தென்றல் பணிப்பாளர் சேரன் அணிவித்தார்.

யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் மலர் வணக்கத்தைத் தொடக்கி வைத்தார்.

தமிழீழக் காவல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழக் காவல் துறையின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கண்ணாளன் தலைமை வகித்தரர்.

பொதுச் சுடரினை சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார்.

ஈகச் சுடரினை கிளிநொச்சி மாவட்டக் கண்காணிப்பாளர் தனஞ்சயன்ஏற்ற மலர் மாலையினை பா.நடேசன் அணிவித்தார். தொடர்ந்து வணக்க உரைகள் நிகழ்த்தப்பட்டன.

*மன்னார்*

மன்னார் மடு வலயக் கல்விப் பணிமனையில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு உணர்வெழுச்சியுடன் நிகழ்வு நடைபெற்றது. கல்வித் திணைக்களத்தின் நிர்வாகிகள் பங்கேற்க நேற்றுக் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கின.

மடுக் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் கரும்புலிகள் வணக்க நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

*வவுனியா*

வவுனியா மாவட்டத்திற்கான கரும்புலிகள் நாள் பிரதான நிகழ்வு நெடுங்கேணியில் நடைபெற்றது.

நெடுங்கேணி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரயாளன் தலைமை வகித்தார். வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் பொதுச் சுடரினை ஏற்றினார். (து-133)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.